மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
ஆண்டிறுதிப் பரீட்சை — 2019

**தரம் –09**

**நாடகமும் அரங்கியலும் I**

**நேரம் -2 மணித்தியாலமங்கள்**

**சுட்டெண் ...........................................**

**கவனிக்க:-**

(i) *எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.*
(ii) *1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.*
(iii) *உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி இடுக.*

## பகுதி I

1) நாடகத்தை குறிக்கும் பழந்தமிழ்ச் சொல்
   1. நாட்டிய 2. கூத்து 3. நட் 4. டிராமா

2) நாடகத்தின் துணைக் கலைகளுக்குள் அடங்காதவை
   1. காட்சியமைப்பு 2. வேடஉடை 3. நடிப்பு 4. ஒளியமைப்பு

3) ஒரு பாத்திரத்தின் சமூகவியற் பண்பாக அமைவது
   1. வயது 2. பழக்கவழக்கங்கள் 3. தொழில் 4. நிறம்

4) யதார்த்த விரோத நாடகமாக அமைவது
   1. எந்தையும் தாயும் 2. பொருளோபொருள்
   3. அரசனின் புத்தாடை 4. உறவுகள்

5) பெரும்பாலும் அரண்மனைக் காட்சிகளையும் வாள், வில், அம்பு போன்ற கைப்பொருட்களையும் பயன்படுத்தும் நாடக வகை
   1. சிறுவர் நாடகம் 2. வரலாற்று நாடகம்
   3. சமூக நாடகம் 4. நகைச்சுவைநாடகம்

6) யாழ்ப்பாணத்தின் வடபுலத்தினை ஆண்ட சிற்றரசனாகிய வெடியரசனின் இயற்பெயர் யாது?
   1. கடலரசன் 2. குகன் 3. போர்வீரகண்டன் 4. ஏரிழாங்குமரன்

7) குரல்வழிச் சித்திரிப்பில் உள்ளடங்காதது
   1. உரையாடல் 2. பாடல் 3. முகபாவம் 4. பேச்சு

8) பாவ வெளிப்பாட்டின் பிரதான ஊடகம் யாது?
   1. உடல் 2. முகம் 3. கை 4. கால்

9) சுதேச வாழ்வியற் சடங்காக அமைவது
   1. சூரன்போர் 2. மானம்பூ 3. வேட்டைத்திருவிழா 4. திருமணம்

10) உலக நாடக தினம் எப்போது கொண்டாடப்படுவது
   1. ஏப்ரல் 27 2. மார்ச் 25 3. மார்ச் 27 4. ஏப்ரல் 25

11) குதி என்ற வினைச்சொல்லின் அடியாக தோன்றிய பாரம்பரிய கலைவடிவம் யாது
1. கும்மி 2. கூத்து 3. இசைநாடகம் 4. கோலாட்டம்

12) தமிழ் நாட்டின் தேசிய நாடக வடிவமாக அமைவது
1.குரவைக்கூத்து 2. வரிக்கூத்து 3. தெருக்கூத்து 4. ஆரியக்கூத்து

13) கதை தழுவாத கூத்தாக அமைவது
1. காத்தவராஜன் கூத்து 2. தென்மோடி 3. பறைமேளக்கூத்து 4. தென்பாங்கு

14) 1. ராஜ பாட் பாத்திரங்களை சிறப்பாக நடித்துப் புகழ்பெற்ற அண்ணாவியார்
1. நாகமணிப்போடி 2. முருகவேள்
3. பூந்தான்யோசேப்பு 4. குழந்தை செபமாலை

15) மன்னார் முத்தமிழ் கலா மன்றத்தினூடாக நாட்டுக் கூத்துக்களை மேடையேற்றியவர் யார்?
1. அப்புக்குட்டி 2. குழந்தைசெபமாலை 3. செல்லையா 4. யோசேப்பு

16) நாடகத்தின் சொல்லாடல் குறிப்பது
1. ஆங்கிகம் 2. வாச்சிகம் 3. சாத்வீகம் 4. ஆஹார்யம்

17) அரங்கின் கேட்டில் மூலகம்
1. ஒளி 2. வேடஉடை 3. காட்சி 4. இசை

18) மட்டக்களப்பில் சிறிய தடிகளைத் தட்டி ஆடப்படும் கூத்து மரபு யாது?
1. மகிடிகூத்து 2. வசந்தன்கூத்து 3. வடமோடிக்கூத்து 4. தென்மோடி

19) அ.ந.கந்தசாமியின் நவீன நாடகமாக கருதப்படுவது
1. குடித்தனம் 2. உடையார்மிடுக்கு 3. மதமாற்றம் 4. பிரிவுப்பாதை

20) படத்தில் காணப்படும் நாடக ஆசிரியர்



1. குழந்தை.ம.சண்முகலிங்கம் 2. பேரா.சி.மௌனகுரு
3.பேரா.க.கணபதிப்பிள்ளை 4. பேரா.க.சிவத்தம்பி

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
ஆண்டிறுதிப் பரீட்சை — 2019

| தரம் –09 | நாடகமும் அரங்கியலும் 11 | நேரம் -2 மணித்தியாலமங்கள் |
|---|---|---|

சுட்டெண் .........................................

**முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

1)
1. நாடகத்தின் துணைக்கலை ஒன்று தருக (1 புள்ளி)
2. கூட்டாகச் சேர்ந்து விளையாடும் அரங்க விளையாட்டு ஒன்று தருக (1 புள்ளி)
3. பாத்திரங்களின் முகபாவத்தினூடாக உணர்ச்சிகளைக் காட்டி நடித்தல் எவ்வகை சித்திரிப்பு (1 புள்ளி)
4. உணர்ச்சி வெளிப்பாட்டினைப் பரதர் எவ்வாறு குறிப்பிடுகின்றார் (1 புள்ளி)
5. நாடகத்திற்கான நிதி நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருப்பவர் யார்? (1 புள்ளி)
6. சங்காரம் என்ற நாடகத்தின் ஆசிரியர் யார்? (1 புள்ளி)
7. காமன் கூத்து ஆடப்படும் பிரதேசம் யாது? (1 புள்ளி)
8. கூத்தின் நெறியாளர் எவ்வாறு அழைக்கப்படுவார் (1 புள்ளி)
9. நாடகத்தின் வகைகள் 2 தருக? (2 புள்ளி)
10. பரத முனிவர் கூறும் மோடியின் வகைகள் யாவை? (2 புள்ளி)

2)
1. நாடக மோதுமை என்றால் என்ன? (3 புள்ளி)
2. மனித வாழ்க்கையில் மோதுகை ஏற்படக்கூடிய இடங்கள் யாவை? (3 புள்ளி)
3. நாடகத்தின் கூறுகளில் ஒன்றான மோதுகையின் அவசியம் யாது? (6 புள்ளி)

3)
1. நாடக எழுத்துருவின் மூலக்கூறுகள் யாவை? (4 புள்ளி)
2. நடிகனது நடிப்புக்கு துணைபுரிகின்ற துணைக்கலைகள் யாவை? (4 புள்ளி)
3. வரலாற்று நாடகம் ஒன்றிற்கு துணைக்கலைகளை எவ்வாறு திட்டமிடுவீர் (4 புள்ளி)

4)
1. மரபுவழிக்கூத்துக்கள் நான்கு தருக? (4 புள்ளி)
2. கூத்தின் பிரதான அம்சங்கள் யாவை? (4 புள்ளி)
3. கூத்தில் பாத்திரங்களின் வரவானது அறிமுகம் செய்யப்படும் முறைகள் யாவை? (1புள்ளி)

5) 1. சங்கிலி நாடகத்தின் பிரதான பாத்திரங்கள் யாவை? (3 புள்ளி)

2. சங்கிலி நாடகத்தினை அடிப்படையாகக் கொண்டு கரு விடயப்பொருள் மோதுகை என்பவற்றை குறிப்பிடுக? (3 புள்ளி)

3. சங்கிலி நாடகத்தை எழுதியவர் யார் அவர் எழுதிய ஐந்து நாடகங்கள் தருக? (6 புள்ளி)

6) 1. உமது பிரதேசத்தில் நிகழ்த்தப்படும் சமயச்சடங்கு 3 தருக? (3 புள்ளி)

2. சுதேச வாழ்வியற் சடங்கு மூன்று தருக? (3 புள்ளி)

3. சுதேச வாழ்வியற் சடங்கு ஒன்றில் காணப்படும் முக்கிய செயல்கள் 6 தருக (6 புள்ளி)

7) பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக

1. சிறுவர் நாடகம்
2. வசந்தன் கூத்து
3. யதார்த்த மோடி யதார்த்தமல்லாத மோடி
4. வகிபாகம் (4x3=12 புள்ளி)